

# இயேசுவுடன்



# பயணம்

## சிலுவைப் பாதை

கிருபாவளன்



வாலிபராக...

# வாருங்கள்!

## வாகை சூடுவோம்!!

கிறிஸ்தவத்தின் மையம் கிறிஸ்துவின் மரணமும் உயர்ப்பும். இதுவே நம் விசுவாசத்தின் மறைபொருள். இந்த மரணமும் உயிர்ப்பும் கிறிஸ்துவின் வாலிபத்தில் நிகழ்ந்தன. வாலிபப் பருவம் விளையாட்டுப் பருவம், வீணடிக்கும் பருவம் என பரவலாய் பேசப்படுகிறது. ஆனால் இறைத் திட்டத்தின் மகா உன்னதமான மீட்பின் நிகழ்ச்சி, கிறிஸ்துவின் வாலிபத்தில் நிகழ்ந்தவை. வாலிப நாட்களை வீணாக்கி விரயமாக்கிக் கொண்டிருக்கும் இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கும் கிறிஸ்துவின் சிலுவைப் பாதை ஒரு சவால். வாலிபத்தின் வீழ்ச்சியை, இளமையின் இறப்பை இயேசுவால் சகித்துக் கொள்ள முடியவில்லை. அற்புதங்களில் எல்லாம் பெரிய அற்புதமான உயிர்ப்பிக்கும் புதுமையை இளைஞர்களுக்காக மட்டுமே நிகழ்த்தினார். அது நயீன் பட்டணத்து விதவையின் மகனாகட்டும், யாயீரின் மகளாகட்டும் அல்லது அவர் அதிகம் நேசித்த லாசர் ஆகட்டும், அனைவருமே வாலிபர்கள். "அவன் மேல் இவருக்கு எவ்வளவு நேசம் பாருங்கள் " என யூதர்கள் வியக்கும் அளவுக்கு லாசர் என்னும் இளைஞனை நேசித்த இயேசு ஒவ்வொரு இளைஞனையும் இளம் பெண்ணையும் இன்றும் நேசிக்கிறார். இலக்கற்ற பயணத்தில் ஈடுபட்டு தீய பழக்கங்களில் புதைந்து நாற்றமடிக்கும் வாழ்வு வாழ்ந்தாலும் அவர்களை அவர் வெறுப்பதில்லை. கல்லைப் புரட்டி " லாசரே வெளியே வா " என அழைத்ததுபோல் இன்றும் அழைக்கிறார்.கட்டவிழ்த்துவிட கருணையோடு அழைக்கின்றார். துயில் கொண்டிருக்கும் வாலிபனே ! வாலிபப் பெண்ணே ! எழுந்து வா ! இயேசுவைப் பின் செல். அவரைப் போல் நீயும் சாதிக்கலாம். அவர் வழி நடத்த துணிவாய் பின் செல்.

# மேலிருந்து அருளப்பட்டது

*'' கீழ்ப்படியுங்கள்... இதுவே ஏற்புடையது ''(எபே 6 :1)*

**முதல் நிலை :**

**இயேசு :** '' நாங்கள் சாதிக்கப் பிறந்தவர்கள். எங்களைச் சாகடித்து விடாதீர்கள். நாங்கள் சிறகடித்து பறந்து சிகரத்தை அடையப் போகிறோம். எங்கள் சிறகை ஒடித்துவிடாதீர்கள் '' என்று சீறும் என் அன்பு இளைஞனே! இளம் பெண்ணே ! சாதிக்க வேண்டும் என்ற உன் வேட்கையை குறித்து நான் பெருமைப்படுகிறேன். உளமாற பாராட்டுகின்றேன். ஆனால் மற்றவர்களை எல்லாம் உன் சாதனையைத் தடை செய்ய முயலும் மனிதர்களாகவே ஏன் பார்க்கிறாய் ?உன் மீது அதிகாரம் செலுத்துவதாய் நீ நினைக்கின்ற உன் பெற்றோராகட்டும், பெரியோராகட்டும், ஆசிரியராகட்டும் அல்லது உன் உறவினர்களாகட்டும், அவர்கள் தரும் அறிவுரைகளை ஏன் கட்டுப்பாடாக நினைக்கின்றாய் ? அவர்களது அறிவுரைகளுக்குப் பின்னால் உன் மீது அவர்கள் கொண்டிருக்கும் அளவற்ற அக்கறையைப் பார்க்க கற்றுக் கொள். அவர்கள் விதிக்கும் கட்டுப்பாடுகளுக்குப் பின்னால் கனிவும், நீ தவறிவிடக் கூடாது என்ற கரிசனையும் இருப்பதை புரிந்து கொள். சில நேரங்களில் அவர்கள் சொல்வதும், செய்வதும் தவறாகத் தோன்றலாம். தவறாகக் கூட இருக்கலாம். சாதாரணமாகவே இவர்கள் யார் என்னைக் கட்டுப்படுத்த என நினைக்கும் உனக்கு அவர்கள் சொல்வதும் செய்வதும் தவறு என்று தெரிந்துவிட்டால் '' இவர்கள் எல்லாம் யோக்கியமா '' என கோபம் பொத்துக் கொண்டு தான் வரும். இது இயற்கை.ஆனால் சற்று நிதானி. சிலுவைப் பாதையின் இந்த தலத்தில் என்னை சற்றுப்பார். பிலாத்தின் தீர்ப்பு தவறு என்று எனக்கு நிச்சயமாய் தெரியும். அவன் கேட்ட கேள்விகளுக்கு முகத்தில் அறைந்தாற் போல் பதில் சொல்லியிருக்க முடியும். ஆனால் அமைதி காத்தேன். அவனது அநியாய தீர்ப்பையும் ஏற்றுக் கொண்டேன். காரணம் '' மேலிருந்து தந்தை அருளாவிட்டால் யாருக்கும் என் மீது அதிகாரம் இல்லை.'' என் மீது சற்றும் அக்கறையில்லாத பிலாத்தின் தீர்ப்பையே நான் ஏற்றுக் கொண்டேன். உன் மீது அளவற்ற அன்பும் அக்கறையும் கொண்ட உன் பெற்றோர் மற்றும் பெரியோரின் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ள தயங்காதே. அவை மேலிருந்து அருளப்பட்ட அதிகாரம். சில நேரங்களில் அவை தவறாயிருந்தாலும் சகித்துக்கொள். உன் கீழ்ப்படிதலின் பலனை விரைவில் நிச்சயமாய் அடைவாய்.

**செபம் :** இறைவா! அன்பாலும், அக்கறையாலும் உந்தப்பட்டு என் மீது செலுத்தப்படும் அதிகாரம் மேலிருந்து அருளப்பட்டது என்பதை ஏற்று வாழும் பணிவான மனதைத்தாரும். ஆமென்.

# சாதிக்க தடையாய் சுமைகள்

*'' வீறு கொள் ! துணிந்து நில் ! நான் உன்னோடு ''*(யோசு 1 : 9)

**இரண்டாம் நிலை :**

**இயேசு :** ''எங்கள் பயணத்தை நிர்ணயிக்க இந்தச் சமூகத்திற்கு என்ன உரிமை? எங்கள் சாதனைப் பயணத்தைத் தடுக்க சுவர்கள் எழுப்ப இவர்கள் யார்?'' என கோபப்படும் என் அன்பு வாலிபனே! வாலிபப் பெண்ணே! முன்னேற முயலும் நீ பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த நபர் என்பதால் சம உரிமைகளும் சம மரியாதையும் மறுக்கப்படலாம். சாதிக்க துடிக்கும் நீ முற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவன் என்பதால் உனக்கு மட்டும் இலக்குகள் மாற்றியமைக்கப்பட்டு அதிகம் எதிர்பார்க்கப்படலாம். பொருளாதாரக் காரணங்களால் நீ பெற முடியாத கல்வியை, உன்னை விட தகுதியில் மிகவும் குறைந்த நபர் பணக்கத்தைகளை வீசி பெற்றுவிடலாம். இவையெல்லாம் சிகரத்தை நோக்கிய உன் பயணத்தில் சுமத்தப்படும் தேவையற்ற சுமைகள். சுமைகளுடன் நடப்பது நிச்சயம் சிரமம்தான். உன்னோடு நானும் வருத்தப்படுகிறேன். அதே வேளையில் உனக்கு ஒரு வார்த்தை சொல்ல விழைகிறேன். என் மீது சுமத்தப்பட்டிருக்கும் சிலுவையைப் பார். ஏன் இந்த சிலுவை? நான் செய்த குற்றம் என்ன? ஆதாம் ஏவாள் என்ற யாரோ இருவரால் நுழைந்த பாவத்தை வீழ்த்த என் மீது சிலுவை சுமத்தப்படுகிறது. ஏற்றுக்கொண்டேன். வெற்றியும் கண்டேன். சரித்திரத்தில் சில பிழைகள் நிகழ்ந்து விட்டன.அவற்றைச் சரிசெய்ய காலம் மட்டும் தேவைப்படுவதில்லை. சிலர் பலியாகவும் நேரிடலாம். நான் ஒரு பலிப்பொருள். இன்றைய காலக்கட்டத்தில் நீயுமா? உனக்காய் வருத்தப்படுகிறேன். ஆனால் தடைக்கற்களைப் படிக்கற்களாக மாற்று.தளராத மனதோடு வீரியமாய்ப் போராடு. எதையும் தாங்கும் இதயம் கொண்ட நீ இதையும் ஏற்று எதிர்கொள். சிலுவையை சுமந்தபோதும் வெற்றிகண்ட என்னைப் போல் தேவையற்ற சிலுவைகளும் அர்த்தமற்ற சுவர்களும் இருந்தபோதும் வாழ்வில் வெற்றி பெற உன்னை வாழ்த்துகிறேன். உனக்குத் துணையாய் நானும் வருகிறேன்.

**செபம் :** இறைவா! தேவையற்ற சுமைகள் என்மீது சுமத்தப்படும் போது அலுத்துக்கொள்ளாமல் உம்மைப்போல் என்னையே பலிப்பொருளாக மாற்றும் தியாக உள்ளம் தாரும். ஆமென்.

# முதல் வீழ்ச்சி

*'விழிப்பாயிருங்கள் நம்பிக்கையில் நிலைத்திருங்கள்'(1கொரி 16:13)*

**மூன்றாம் நிலை :**

**இயேசு :** ''எப்படி இந்தத் தோல்வியை தாங்கி கொள்வது? எப்படி பிறர் முகத்தில் விழிப்பது?'' என தோல்வியால் துவண்டிருக்கும் என் அன்பு மகனே! மகளே! தோல்வியும் வீழ்ச்சியும் ஏற்படுத்தும் வேதனை அதிகமாய்த்தான் இருக்கும். உன்னால் இயன்றவரை முயன்றும் தோற்றுப்போனல் வருத்தம் இன்னும் அதிகமாவே இருக்கும். 'ஏன் வீழ்ந்தோம்' என சிந்திக்க விடாமல் 'ஐயையோ விழுந்து விட்டோமே ! எல்லோரும் பார்த்து விட்டார்களே!' என்ற கவலைதான் மேலோங்கி நிற்கும். நீ வீழ்ந்ததைப் பார்த்வர்கள் சிலர் பரிகசிக்கத் தொடங்கி விட்டால் உன் வேதனைக்கு அளவே இருக்காது. ஆனால் சற்று நிதானமாய் யோசி. ' விழுந்து விட்டோமே' என்பதற்காய் வருந்துகிறாயா அல்லது பிறர் பார்க்கும்படி விழுந்து விட்டோமே என வருந்துகிறாயா? எல்லாரும் தவறுகிறார்கள் எல்லாரும் வீழ்கிறார்கள். ஆனால் எல்லாருடைய தவறுதலையும் எல்லாருடைய வீழ்ச்சியையும் எல்லாரும் பார்த்துவிடுவதில்லை. எனவே கவலைப்படாதே. சுற்றிச் சுற்றிப் பார்ப்பதை விட்டு உன்னை உற்று உற்றுப் பார். எத்தைனை பேர் பார்த்தார்கள்? என்ன சொல்லி சமாளிக்கலாம் என்று நினைப்பதை நிறுத்தி ' ஏன் விழுந்தோம். எப்படி தடுத்திருக்கலாம். எல்லா முயற்சியும் செய்தோமா' என எண்ணிப்பார். சிகரத்தை எட்டிவிட்டால் எங்கெல்லாம் வீழ்ந்தாய் எத்தனை முறை தோற்றாய் என்றெல்லாம் கணக்குப் பார்க்க மாட்டார்கள். எனவே எழு! சிகரத்தை நோக்கிய உன் பயணத்தில் தொடர்ந்து செல். தவறுவதில் நீ தனித்தில்லை. வீழ்வதில் நீ விதிவிலக்கல்ல. எல்லாரும் வீழ்ந்திருக்கிறார்கள். நான் உட்பட. என்னை நினைவு கூறுபவர்கள் என் சிலுவைப் பலியையும் அதனால் விளைந்த மீட்பையும் தான் நினைவு கூர்கிறார்களேயன்றி நான் விழுந்ததைப் பெரிது படுத்துவதில்லை. நீயும் எழுந்திரு என்னைப்போல. அடுத்த இலக்கை நோக்கி வீறுநடைபோடு. எழுந்தபின் விழுந்ததைப் பற்றி நினைக்காதே, தூசி தட்டிவிட்டு துரிதமாய் முன்னேறு.

**செபம்:** இறைவா! தடுமாற்றங்கள் தவிர்க்க முடியாதவை என்பதை புரிந்துக் கொண்டு துணிவுடன் எழுந்து உம்மைப் போல் முன்செல்ல துணிவான உள்ளம் தாரும். ஆமென்.

# உணர்ச்சிகள் உறங்குகின்றன

*'' இளவயதின் இச்சைகளை விட்டுவிடுங்கள் ''(2திமோ 2 : 22)*

**நான்காம் நிலை :**

**இயேசு :** அந்த முதல் சந்திப்பை மறக்க முடியுமா? அந்த சந்திப்பின்போது என் மனதுக்குள்தான் எத்தனை எத்தனை பட்டாம்பூச்சிகள். அதன் பிறகு என்னால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. எங்கு திரும்பினாலும் அந்த முகம். எங்கு பார்த்தாலும் அந்தப் புன்னகை, என காற்றில் வலம் வந்து கொண்டிருக்கும் என் அன்பு மகனே! மகளே! நீ காதல் வயப்பட்டிருக்கிறாய் என நினைக்கிறேன். காதல் உன் கண்களை மறைக்கத் தொடங்கி விட்டதோ! காதல் தவறு என்று நான் சொல்லவில்லை. ஆனால் காலம் தான் தவறு. சிலுவையின் பாதையில் என் அன்னை என்னைச் சந்திக்கிறாள். சந்தித்த மாத்திரத்தில் உணர்ச்சிகளால் உந்தப்பட்டு உள்ளம் குமுறி அழுது கட்டிப்பிடித்து கண்ணீர் சிந்தி ஓலமிட்டிருக்கலாம். அவள் ஒன்றுமே செய்யவில்லை. உணர்ச்சிகளையெல்லாம் சற்று உறங்க வைத்துவிட்டு என் உடன் வருகிறாள். இப்போது உணர்ச்சிகளை வெளியிட்டால் அது என் பயணத்தைப் பாதித்து விடும் என்பது அவளுக்குத் தெரியும். எனக்கும் தெரியும். நேரம் வரும். அப்போது என்னை தன் மடி மீது கிடத்தி ஓலமிடுவாள். ஆனால் இது உணர்ச்சிகளின் நேரம் அல்ல. உத்வேகத்தின் நேரம். பயணிக்கும் நேரம். சிகரத்தை நோக்கிய பயணத்தில் சிதறடிக்கும் சிந்தனைகள் வேண்டாம். என் அன்னையைப் போல் என்னைப் போல் உணர்ச்சிகளை சற்று உறங்க வைக்க கற்றுக்கொள். உனக்கென்று ஒரு இடம், உனக்கென்று ஒரு நிலை இவற்றை அடையும் வரை உணர்ச்சி வயப்பட்டுவிடாதே. காலம் கனியும். சிகரத்தை எட்டுவாய். சாதனையை நிகழ்த்துவாய். அப்போது வெளிப்படுத்து உன் உணர்ச்சியை. காலத்தை ஒத்திவைக்க முடியாது. எனவே காதலை ஒத்திவை. இல்லையேல் வெற்றியும் இலட்சியமும் உன்னை அடைவதை ஒத்திவைத்துவிடும்.

**செபம் :** இறைவா! இலட்சியம் நோக்கிய என் பயணத்தில், நான் உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டுவிடாமல், காலத்தின் அருமைக் கருதி கர்மத்தில் கண்ணாயிருக்கும் கடமை உள்ளம் தாரும். ஆமென்.

# ஆதரிக்கும் அன்பு

*" வழிநடத்தி அறிவுப்புகட்டுவோரை மதியுங்கள் "(1 தெச 5:12)*

**ஐந்தாம் நிலை :**

**இயேசு :** 'இதைச் செய் அதைச் செய்யாதே. இப்படிப்போ. அப்படிப் போகாதே' என்று உபதேசம் செய்யும் உத்தமர்களில் யாராவது 'வா இப்படிப் போகலாம். வா இப்படிச் செய்யலாம்' என்று சொல்கிறார்களா? அல்லது உடன் வருகிறார்களா? எனக்குமுறும் என் நேச வாலிபனே! வாலிப் பெண்ணே! உன் பாதைகளை நிர்மானிக்க பலபேர் உள்ளனர். உன் செயல்களை விமர்சிக்கவும் நிறையபேர் இருக்கின்றனர். உன் தவறுகளையும் தடுமாறல்களையும் குத்திக்காட்டி குதர்க்கம் பேச எத்தனையோ பேர் உள்ளனர். ஆனால் உன்னோடு தோள்கொடுத்து துணையாயிருந்து உடன் வந்து இப்படிச்செய்யலாமே இப்படிப் போகலாமே என்று சொல்லும் மனிதர்களைத் தான் நீ தேடுகிறாய். ஆனால் அத்தகையோரை பார்ப்பதுதான் அரிதாக உள்ளது. என் சிலுவைப் பாதையின் போதும் எனக்கு தோள் கொடுக்க யாரேனும் கிடைப்பார்களா என பார்த்தேன். வேடிக்கைப் பார்க்கவும், வஞ்சகம் பேசவும், வசையாலும் கசையாலும் அடிக்கவும் தயாராயிருந்தவர்களை கண்டேனேயன்றி உதவும் மனமுடையோரை பார்க்க முடியவில்லை. இறுதியாக சீமோன் என்னும் ஒருவனை நான் பெற்றேன். முழுமனதோடு தோள் கொடுக்காவிட்டாலும் கிடைத்த துணையை நான் ஏற்றுக்கொண்டேன். சிகரத்தை நோக்கிய உன் பயணத்தில் நீ எதிர்பார்க்கும் மனநிலையோடு நீ எதிர்பார்க்கும் குணங்களோடு வழி காட்டிகளோ துணையாளர்களோ கிடைக்காமல் போகலாம். உன் நிலைக்கு இறங்கி வந்து உனக்குத் தோள் கொடுக்கக் கூடிய பரந்த மனம் உடையவர்கள் கிடைக்காமல் போகலாம். குடும்பப் பொறுப்பு, சமூகக்கடமை, சமய எதிர்பார்ப்பு போன்ற கடமைகளின் பொருட்டு சிலர் உனக்கு உதவி புரியலாம். அவர்களின் மனநிலையும் போக்கும் உனக்கு பிடிக்காமல் போகலாம். ஆனால் கடவுள் அனுப்பிய ஒத்தாசை என ஏற்றுக் கொள். எதிர்பார்த்த துணை கிடைக்காவிட்டாலும், கிடைத்த துணையை ஏற்றுக்கொள்.

**செபம் :** இறைவா ! எனக்குத் துணையாக வருபவர்களின் குறைகளைக் கண்டு முறையிட்டுக் கொண்டிராமல் கிடைக்கின்ற ஒத்தாசையைப் பயன்படுத்தி வாழும் பக்குவமான மனது தாரும்.ஆமென்.

## தேற்றுகிற நட்பு

*' நம்பிக்கைக்குரிய நண்பன் பாதுகாப்பான புகலிடம் '(சீரா 6: 14)*

**ஆறாம் நிலை :**

**இயேசு :** உன்னையே சுற்றிச் சுற்றி வந்த நண்பர்கள், உன்னோடு இருப்பதையே பெருமையாகவும், மகிழ்வாகவும் கருதியவர்கள், இவர்களையெல்லாம் நீ காயப்பட்டுள்ள நிலையில் தேடி ஏமாந்துபோயிருக்கும் என் அன்பு இளைஞனே! இளம் பெண்ணே! அவர்களை நீ காணமுடியாது. காரணம் அவர்கள் உன்மீது காட்டிய நேசம், உன்னுடன் கொண்டிருந்த நட்பு, உன்னோடு ஏற்படுத்திக்கொண்ட உறவு இவற்றிற்கெல்லாம் அடிப்படை 'சுயநலம்'. அவர்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவு பணம் உன்னிடம் இருந்தது. உன்னைச் சுற்றி வந்தார்கள். அவர்கள் உல்லாசமாயிருக்க உன் துணிச்சலும் வசீகரமும் உதவியாய் இருந்தது. உடன் இருந்தார்கள். அவர்கள் மத்தியில் நீ இவ்வளவு நாள் இருந்திருக்கலாம். ஆனால் அவர்கள் மனதில் நீ இருக்கவில்லை. எனவேதான் காயப்பட்டு வேதனையோடு நீ அவர்களைத் தேடும்போது அவர்களைக் காணோம். என் சிலுவைப் பாதையின் போதும் என் காயங்களைத் துடைக்க யாரேனும் இருப்பார்களோ எனப் பார்த்தேன். என்னால் பார்வை பெற்றவர்கள், என்னால் பசியாறப் பெற்றவர்கள், என்னால் செவிப்புலன் பெற்றவர்கள், என்னால் நலம் பெற்றவர்கள் என எத்தனையோ பேரை என்னால் அடையாளம் காணமுடிந்தது. ஆனால் அவர்கள் தான் என்னை கண்டுகொள்ளவில்லை. இதயத்தின் அன்பால் உந்தப்பட்டு இடறல்பட்டபோது விரைந்து வந்தாள் வெரோணிக்காள். அவள் வைத்திருந்த துணியில் மட்டுமல்ல, அவள் இதயத்திலும் நானிருந்தேன். பத்துப்பேர் புடைசூழ பந்தாவோடு வாழ்வதை விட நல்லவன் ஒருவன் உனக்கு நண்பனாய் இருக்கட்டும். இடுக்கண் உறும்போது உன்னோடு இருப்பவனாய் இருக்கட்டும். தவறி விழும்போது தாங்குபவனாய்,திருத்துபவனாய் இருக்கட்டும். நட்பை உரசிப்பார்க்கும் நேரம் இது. உன்னைச் சுற்றி இருப்பவர்கள் நல்லவர்களா! பச்சோந்திகளா! தேர்வு செய்.

**செபம் :** இறைவா! நான்கு பேர் மத்தியில் இருப்பதைவிட நல்லவன் ஒருவனோடு நழுவாத நட்புடன் வாழ்வதே சிறந்தது என்பதை உணர்ந்து நல்ல நண்பர்களைத் தேடும் தெளிவான மனம் தாரும். ஆமென்.

# மீண்டும் வீழ்ச்சி

*" உள்ளங்கள் ஊக்கம் பெற்று உறுதிப்படுவதாக "(2தெச 2: 17)*

**ஏழாம் நிலை :**

**இயேசு :** "இன்னும் செட்டில் ஆகவில்லையா? இன்னும் தகுந்த வேலை கிடைக்கவில்லையா? நல்ல நிலையில் இருப்பாய் என்றல்லவா எதிர்பார்த்தோம்" இது போன்ற பேச்சுக்களால் வேதனைப்பட்டு விழுந்து கிடக்கும் என் அன்பு மகனே! மகளே! உன் தகுதிக்கும் திறமைக்கும் நீ நல்ல வேலையில் அமர்ந்து இதற்குள் உயர்ந்த நிலையை எட்டியிருக்க வேண்டும். ஆனால் இந்தக் காலத்தில் வேலை கிடைப்பதற்கு தகுதிமட்டும் இருந்தால் போதவில்லையே! பலமான சிபாரிசு, அன்பளிப்பு என்ற பெயரில் மேசைக்கு அடியில் தரப்படும் சில நோட்டுக்கத்தைகள் இவையெல்லாம்தான் மறைமுகமாக செயல்படுகின்றன. நேர்முகத்தேர்வில் நீ சாதிப்பதைவிட மறைமுக செயல்கள் அதிகம் சாதித்துவிடுகின்றன. இவற்றையெல்லாம் அறிந்தவர்கள் கூட உன்னைப் பார்த்து "இன்னுமா சும்மா இருக்கிறாய்" என்று கேட்கும்போது நிச்சயம் வேதனையாய்த்தான் இருக்கும். அப்படி கேட்பவர்களுள் சிலர், தக்க நேரத்தில் தக்க அறிமுகம் செய்து தக்க உதவி செய்திருந்தால் நீ எங்கோ சென்றிருப்பாய், எவ்வளவோ முன்னேறியிருப்பாய். ஆனால் தூக்கிவிட ஒன்றுமே செய்யாமல் தூற்றுவதை மட்டுமே வாடிக்கையாகக் கொண்டுள்ளார்கள். என்ன செய்வது? சிலுவைப் பாதையின் போது நான் விழுந்தபோதும் இதேநிலைதான். என் வல்லமைக்கு நான் விழுந்திருக்கவே கூடாது. ஆனால் சிலுவையின் பாரமும் பாவத்தின் கனாகனமும் என்னைக் கீழே தள்ளியது. கரம் கொடுத்து தூக்கி விடுவதற்குப் பதிலாக தூற்றத்தான் செய்தார்கள். ஆனால் நான் விடுவதாக இல்லை. எழுந்தேன், நடந்தேன், கல்வாரி சிகரத்தை அடைந்தேன். உன் தகுதிக்கு ஏற்ற வேலை கிடைக்காமல் இருக்கலாம். நீ விரும்பும் பணி கிடைக்காமல் போகலாம். கிடைக்கும் பணியை விரும்ப கற்றுக்கொள். உன் தகுதிக்கு குறைந்ததாயினும் பரவாயில்லை. வெட்டி கௌரவம் பார்த்து வெறுமனே இருப்பதை விட கிடைத்த நூல் நுனியைப் பிடித்துக் கொண்டு முன்னேற முற்படு. யாருக்குத் தெரியும். அதுவே விண்ணில் பறக்கும் பட்டமாக உன்னை உயர்த்தக் கூடும்.

**செபம் :** இறைவா! தகுதிக்கேற்ற வேலை கிடைக்கும்வரை வெட்டியாய் இருந்துவிடாமல் கிடைத்ததைக் கொண்டு உயர்வதற்கான முயற்சியைச் செய்யும் தளராத மனதைத் தாரும். ஆமென்.

# அழுகைக்கு காரணமாக வேண்டாம்

*'' பயனற்ற இருளின் செயல்கள் வேண்டாம் ''(எபெ 5 :11)*

**எட்டாம் நிலை :**

**இயேசு :** ''எங்கள் பருவம் அப்படிப்பட்டது. சற்று குறும்பாகத்தான் இருப்போம். எங்கள் அபிலாசைகளும் சபலங்களும் சில நேரங்களில் சில்மிஷங்களாய் வெளிப்படத்தான் செய்யும். இதையெல்லாம் பெரிதுபடுத்துவதா?'' எனக் கேட்கும் என் துடிப்புள்ள வாலிபனே! பருவத்தின் கோளாறை புரிந்துகொள்ள முடிகிறது. கிண்டல் அடிப்பதும் வேடிக்கை செய்வதும் விளையாட்டாய் சில காரியங்கள் சொல்வதும், செய்வதும் உனக்கு சாதாரணமான விஷயங்கள். ஆனால் அவையே விபரீத விஷமங்களாகிவிடக் கூடாது. நீ மகிழ்ச்சியாய் இருப்பதற்குச் செய்கின்ற செயல்கள் பிறரது மகிழ்ச்சிக்கு குந்தகம் விளைவிக்கக் கூடாது. அவர்களது சுதந்திரத்தில், அவர்களது ஆளுமையில், அவர்களது அந்தரங்கத்தில், ஆக்கிரமிப்பு செய்ய உனக்கு என்ன உரிமை உள்ளது? வரம்பு மீறினால் எதுவுமே தவறுதான். ''ரேகிங்'' என்ற பெயரில் 'ஈவ்டீஸிங்' என்ற பெயரில் நீ நிகழ்த்தும் விளையாட்டுக்கள் விபரீதங்களாகி சில நேரங்களில் உயிரைப் பறிக்கும் விபத்துக்களாக மாறிவிடுவதில்லையா? நீ சில நொடிப்பொழுதுகள் மகிழ்ச்சியாய் இருப்பதற்காய் பலரை வாழ்நாளெல்லாம் அழவைத்து விடுகிறாயே! ''எனக்காக அழவேண்டாம். உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்'' என நான் இந்த தலத்தில் சொன்னது உன் போன்ற இளைஞர்களின் செயல்களையும் கருத்தில் கொண்டுதான். பிறருக்காகக் கண்ணீர் வடிப்பது கருணையின் அடையாளம். அது மனிதப்பண்பு. பிறரை கண்ணீர் சிந்த வைப்பது கயமையின் அடையாளம். அது மிருகத்தனம். நீ மனிதன். பிறரது சிலுவைகளுக்கும், பிறரது வேதனைகளுக்கும்,வாழ்நாள் முழுதும் அவர்கள் வடிக்கும் கண்ணீருக்கும் ஒருபோதும் நீ காரணமாகிவிடாதே. அது அவர்கள் வாழ்க்கையை மட்டுமல்ல உன் வாழ்வையும் நிச்சயம் பாதிக்கும். விபரீதங்கள் நிகழ்ந்துவிட்டால் அவை ஆழ்மனக் காயங்களாய் உன் மனதையும் பாதித்து குற்றப்பழியுணர்வுடன் நீ குமுறிக்கொண்டே இருக்க வேண்டியிருக்கும். எல்லை மீறாதே. மீறியிருந்தால் கசிந்துருகி மன்னிப்பு கேள். என்னிடம் மட்டுமல்ல. உன்னால் வேதனைப் பட்டவர்களிடமும் தான்.

**செபம் :** இறைவா! விளையாட்டுக்குக் கூட பிறரது மனதை புண்படுத்துவதைத் தவிர்த்து, யாருக்கும் எவ்விதத்திலும் சிரமமோ, சங்கடமோ ஏற்படுத்தாத நல்ல உள்ளம் தாரும். ஆமென்.

# தடுமாற்றம் தளர்ச்சியல்ல

*" நல்லதைப் பற்றி... தீமையை விலக்குங்கள் "(1தெச 5:21)*

**ஒன்பதாம் நிலை :**

**இயேசு :** "நல்ல பெயர் எடுக்கத்தான் ஆசை. அதற்குத்தான் முயல்கிறோம். ஆனால் முடியவில்லையே, எங்கள் மீது பழிபோடும் பெரியவர்கள் எங்கள் பலவீனத்தைப் புரிந்துகொள்ளக்கூடாதா" என அங்கலாய்க்கும் என் அன்பு இளைஞனே! இளம் பெண்ணே! மீண்டும் மீண்டும் நீ தவறுவதைப் பார்க்கும்போது ஒரு சந்தேகம் எழுகிறது. நீ, பலவீனத்தால் விழுகிறாயா? அல்லது இந்த பலவீனங்களில் சுகம் காண்கிறாயா? எத்தனை அறிவுரைகள்! எத்தனை உதவிகள்! எத்தனை கருத்தரங்குகள்! எத்தனை குழு ஆய்வுகள்! இப்படி எத்தனையோ சாதனங்களால் உன்னைச் சரிகட்டப்பார்த்தாலும், நீ சறுக்கிக் கொண்டே இருக்கிறாயே! உன் சறுக்கல்கள் உனக்கு வேதனை தருகிறதோ இல்லையோ எனக்குத் தருகின்றன. "இவர்கள் எல்லாம் உள்ளனரா? நிச்சயம் ஒரு கலாட்டாவை எதிர்பார்க்கலாம். நிச்சயம் ஒரு குழப்பம் ஏற்படும்" என்று சொல்லும் அளவுக்கு உன் செயல்கள் அமைந்து விடுகின்றனவே, எப்போதாவது நிகழ்ந்தால் அதை தவறுதல் எனலாம். ஆனால் எப்போதுமே நடந்தால், அது தற்செயலான தவறு அல்ல. தவறான குணநலனின் பிரதிபலிப்பு. நீ பலவீனத்தால் விழுகிறாயா? அல்லது விழுவதையே பழக்கமாக்கிவிட்டாயா என்பதை நீ எழுகின்ற முறைதான் சொல்லும். நான் விழுந்தேன் மூன்று முறை விழுந்தேன். மூன்று முறையும் எழுந்தேன். உடனே எழுந்தேன். முனைப்புடன் முன்னேறினேன். உன் பலவீனத்தால் நீயும் விழநேரிடும். பரவாயில்லை. ஆனால் விழுந்த உன்னைப் பார்க்கும்போது எழவேண்டும் என்ற ஆசை இருப்பதாகவே தெரியவில்லையே! விழுந்து கிடப்பதையே நீ சுகமாகக் கருதுவது போல் அல்லவா தோன்றுகிறது. திருந்துவதற்கும் நல்லவனாய் மாறுவதற்கும் நீ காட்டும் அக்கறை, நீ எடுக்கும் முயற்சி, நீ செலுத்தும் கவனம் இவற்றைப் பார்க்கும் போதே சொல்லிவிடலாம் 'அவன் முயல்கிறான் வீழ்ந்தாலும் பரவாயில்லை எழுந்துவிடுவான்' என்று. முன்னேறுவதில் முனைப்பாயிரு. தடுமாறு. ஆனால் தளர்ந்துவிடாதே. நம்பு. உன்னால் முடியும்.

**செபம் :** இறைவா! தவறு செய்தே பழகிவிட்டால் தவறுகிறோம் என்ற உணர்வே இல்லாமல் போய்விடும் என்பதை உணர்ந்து தவற்தைத் திருத்திக் கொள்ளும் திடமான மனதைத்தாரும். ஆமென்.

# உடலென்னும் ஆலயம்

*" உள்ளம், ஆன்மா, உடல் குற்றமின்றி காக்கப்படுக "(1தெச 5:23)*

**பத்தாம் நிலை :**

**இயேசு :** வாலிபத்தில் ருசிக்காததை வேறு எப்போது ருசிப்பது? அனுபவிக்க வேண்டியதையெல்லாம் அனுபவித்து விடுவோம். வயோதிகம் வரும்போது தானாக அடங்கி விடும் என்று இளமையை ரசித்துக் கொண்டிருக்கும் என் அன்பு வாலிபனே! வாலிபப் பெண்ணே! நீ சிரித்துக் கொண்டிருப்பதில் யாருக்கும் வருத்தம் இல்லை. ஆனால் உன் சிரிப்பு நிலைத்திருக்க வேண்டும் என்பதில்தான் அக்கறையும் ஆதங்கமும். நீ விதவிதமாய் உறிஞ்சிவிடும் புகை வளையங்கள் எவ்வளவு சீக்கிரம் கரைந்து விடுகிறதோ அவ்வளவு சீக்கிரம் உன் சிற்றின்பமும் கரைந்து விடும். உதட்டின் மீது சிகரெட்டை வைத்து அதன் ஒரு முனையில் நீ பற்ற வைக்கும் நெருப்பு உனக்கு நீயே வைத்துக்கொள்ளும் கொள்ளி என்பதை உணர்கிறாயா? மதுக் கிண்ணங்கள் தரும் சற்று நேர மயக்கத்திற்கும் இன்பத்திற்கும் நீ தரும் விலை என்ன தெரியுமா? உன் இதயமும் நுரையீரலும். அவை பாதிக்கப்பட்டபின் அருந்துவதற்கு மது இருக்கும். ஆனால் நீ இருக்க மாட்டாய். போதைப் பொருட்களை உட்கொண்டும் ஊசியால் உட்செலுத்தியும் உற்சாகப்படுவதாய் உளரும் நீ, உட்செலுத்துவது மெல்லச் சாகடிக்கும் விஷம் என்பதை அறிவாயா? உடலின் இச்சைகளை பூர்த்தி செய்ய நீ செல்லும் தகாத இடங்கள் உனக்கு கிளுகிளுப்பை தருவதாகச் சொல்கிறாயே. அத்தோடு அவை எய்ட்சையும் தரலாம். அப்போது வெலவெலத்துப் போவாய். கவர்ச்சி ஆடை உடுத்தி உன்னையே வியாபாரப் பொருளாக்கும் இளம்பெண்ணே! நீ குறைப்பது ஆடையை மட்டுமல்ல. உன் மானத்தையும் மாண்பையும்தான். என் உடலோடு ஒட்டிய ஆடைகளை வீரர்கள் பிடித்து இழுத்தபோது ரணங்கள் உண்டாயின. ஆடையிழந்து அவமானப்பட்டேன். என் உடல் கூசியது. ஆனால் என் ஆன்மா கூசவில்லை. அவர்கள் என்னை அசிங்கப் படுத்தினார்களேயன்றி நான் அசிங்கப்படவில்லை. நீயோ உன்னையே அசிங்கப்படுத்திக் கொள்கிறாயே! சிற்றின்பப் பொருட்களால் உன்னையே ரணப்படுத்திக் கொள்கிறாயே! உன் உடல் பரிசுத்த ஆவியின் ஆலயம். அதை கள்வரின் குகையாக்கி விடாதே!

**செபம் :** இறைவா! சிற்றின்பத்தில் மூழ்குவதால் கிடைக்கும் இன்பம் நிலையானதல்ல என்பதை உணர்ந்து உடலையும் ஆன்மாவையும் மாசுப்படாமல் காக்கும் தூய உள்ளம் தாரும் ஆமென்.

# கட்டப்படுவது உயர்த்தப்படுவதற்கே

*'' தடங்கலற்ற வழியை நம்பாதே ''(சீராக் 32 : 21)*

**பதினொன்றாம் நிலை :**

**இயேசு :-** ''நாங்கள் வயதுக்கு வந்து விட்டோம். எங்களுக்கும் விபரம் தெரிந்து விட்டது! எங்கள் விஷயத்தில் மூக்கை நுழைக்காதீர்கள்! உங்கள் காலம் வேறு. எங்கள் காலம் வேறு, எங்களுக்குத் தெரிந்ததில் ஒரு சிறுபகுதி கூட உங்களுக்குத் தெரியாது'' எனப் பலரை உதாசீனப்படுத்தும் என் அன்பு இளைஞனே! இளம்பெண்ணே! உன்னிடம் இருக்கும் அறிவையும் ஆற்றலையும் திறமையையும் தீரத்தையும் யாரும் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால் உன்னிடம் வேகம் இருக்கும் அளவுக்கு விவேகம் உள்ளதா? அனுபவம் என்கின்ற பள்ளியில் பயின்ற மூத்த மாணவர்கள்தான் நாங்கள். தலைமுறை இடைவெளி என்ற பெயரில் எங்களைத் தறித்து விடாதே! பொருள் செறிந்த உன் பேச்சு நீ உதிர்க்கும் தரக்குறைவான வார்த்தைகளால், வேகத்தில் நீ பயன்படுத்தும் தகாத சொற்களால், அடிப்பட்டுப் போவதில்லையா? கருத்து மோதல் ஏற்பட்டு காரசாரமான விவாதம் நிகழும்போது நீ கட்டுப்பாடின்றி கரத்தை உயர்த்துவதால் உன் பக்கத்தின் நியாயம் களங்கப்பட்டுப் போவதில்லையா? பத்து பேர் செய்ய வேண்டிய வேலையை லாவகமாய் ஒரே கையால் செய்து முடிக்கும் ஆற்றல் பெற்ற உன் கைகளையும், எட்டு அடி எடுத்து வைத்து எட்ட வேண்டிய தூரத்தை ஒரே அடியில் அசுர வேகத்தில் எட்டி விடக்கூடிய திறன் படைத்த உன் கால்களையும் பயன்படுத்த முடியாத அளவுக்கு உன் அடாவடித்தனம் இருக்கிறதே! இதைச் செய்து முடிக்க இளைஞர்களால் தான் முடியும். ஆனால் இதை வைத்துக்கொண்டு பெரிய களேபரம் பண்ணி விடுவார்களே! வம்பை விலை கொடுத்து வாங்க வேண்டாம். தாமதமானாலும் நாமே செய்து விடுவோம், என பொறுப்பில் உள்ளவர்களை சொல்ல வைத்து விடாதே. உன் சொல்லிலும், செயலிலும், நடத்தையிலும், கட்டுப்பாடும் கண்ணியமும் இருக்கட்டும். என்னைச் சிலுவையில் அறைய என் கைகளையும் கால்களையும் நான் விரித்துக் கொடுத்தேன். காரணம் கட்டப்பட்டால்தான் நான் உயர்த்தப்படுவேன். உயர்த்தப்பட்டால் தான் நான் மீட்பைத் தருவேன். கட்டுப்பாடு உன்னை தடுத்து நிறுத்த அல்ல. பக்குவப்படுத்தவே. காட்டாறு பலன்தராது. அணையிடப்பட்ட நீர் அதிக பலன் தரும்.

**செபம் :** இறைவா! கண்ணியமும் கட்டுப்பாடும் குறைவுபட்டால் தரமான செயல்கள் கூட தரங்கெட்டவை ஆகிவிடும் என்பதை உணர்ந்து சுயகட்டுப்பாட்டோடு வாழும் கண்ணியம் தாரும். ஆமென்.

# விலை மதிப்பற்றது உன் உயிர்

*" உடலால் கடவுளுக்குப் பெருமை சேருங்கள் "(1கொரி 6:20)*

**பன்னிரெண்டாம் நிலை:**

**இயேசு :** " இலட்சியத்தில் தோல்வி, காதலில் தோல்வி, வாழ்க்கையில் தோல்வி, மொத்தத்தில் நானே ஒரு தோல்வி. தோற்றுப் போனவனாய் உயிரைத் தக்க வைத்துக் கொண்டிருப்பதைக் காட்டிலும் அதை துறந்து விடுவதே மேல்" எனத் தற்கொலை எண்ணங்களை வளர்த்துக் கொண்டிருக்கும் என் அன்பு மகனே! மகளே! நீ உடைந்து போய் இருக்கிறாய். அதனால்தான் உயிரின் மேன்மையை இப்போது உன்னால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. நீ ஏன் உன் உயிரை இவ்வளவு துச்சமாக நினைக்கிறாய்? தோற்றவர்களெல்லாம் தற்கொலை செய்திருந்தால் இந்த உலகமே ஒரு கல்லறையாகத் தான் இருக்கும். உயிரை விடுதல் ஒரு தியாகம், ஒரு வீரச்செயல் எனத் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறாய். அது கடைந்தெடுத்த கோழைத்தனம். தேசத்திற்காக, விசுவாசத்திற்காக, கொண்ட கொள்கைக்காக, நீ போராடுகையில் உன் உயிர் பறிக்கப்பட்டால் அது தியாகம். ஆனால் நான் விரும்பியதை அடைய முடியவில்லை, அதனால் மடிகிறேன் எனச்சொல்வது உன் இயலாமையின் உச்சக்கட்டம். எந்த தோல்வியையும் வெற்றியாக மாற்ற அடுத்த வாய்ப்பு உண்டு. ஆனால் உன் தற்கொலை முயற்சியில் வெற்றி பெற்றுவிட்டால் எதற்கும் எப்பொழுதும் இன்னொரு வாய்ப்பு இல்லாமல் போய்விடும். உன் உயிர் என்ன அவ்வளவு மலிவான பொருளா? வெள்ளித்திரையில் மட்டுமே உன்னைச் சந்திக்கும் நடிக நடிகைக்காக இழக்க! தேர்தலின் நேரத்தில் மட்டும் உன்னைத் தழுவிக்கொள்ளும் அரசியல்வாதிக்காக தீக்குளிக்க! ஒன்றைப் புரிந்துகொள். உன் உயிர் உனக்குச் சொந்தமானதன்று. அது இறைவனுக்கு உரியது. என் நேரம் வரும்வரை என் உயிரை யாரும் பறிக்க முடியவில்லை. 'எல்லாம் நிறைவேறிற்று' என நான் உணர்ந்து தந்தையின் கைகளில் என் ஆவியை ஒப்படைக்க அவர் குறித்த நேரம் வரும்வரை யாரும் ஒன்றும் செய்ய முடியவில்லை. விலை மதிப்பற்றது உன் உயிர். அதை இழக்க அல்லது துறக்க உன்னத இலட்சியங்கள் இன்னும் எத்தனையோ உண்டு. காதலர்க்காக, நடிக நடிகைக்காக, அரசியல்வாதிக்காக, அதை இழப்பதை விட உன்னைப் படைத்த கடவுளுக்காக உயிரைப் பேணி அழகுபடுத்தி வை. உன் வாழ்வை அர்த்தமுள்ளதாக்கு.

**செபம் :** இறைவா! அடுத்தடுத்த தோல்விகள் என் வாழ்க்கையின் அர்த்தத்தைக் குறைத்தாலும், தொடர்ந்து முயன்று வாழ்க்கைக்கு அர்த்தம் சேர்க்கும் விடாமுயற்சி தாரும். ஆமென்.

# கலைந்த கனவுகள்

*'' மிகுந்த கனி கொடுப்பதே ... தந்தைக்கு மகிமை ''(யோவா 15 :8)*

**பதின்மூன்றாம் நிலை :**

**இயேசு :** ''நாங்கள் ஆசைப்பட்ட எதை அடைந்தோம்? அண்டை வீட்டு நண்பனின் வசதியை எங்கள் பெற்றோரால் தரமுடிந்ததா அல்லது பணம், சொத்து, அந்தஸ்து என எங்கள் வாழ்விற்கு மூலதனம் தான் தரமுடிந்ததா? நாங்களே தட்டுத்தடுமாறி நடைபோட வேண்டியுள்ளது" என நொந்து கொள்ளும் என் அன்பு வாலிபனே! வாலிபப் பெண்ணே! வெற்றி பெற்றவர்களெல்லாம் வசதி படைத்தவர்களாய் இருந்ததில்லை. வசதியற்றவர்கள் எல்லோருமே தோற்றுப் போனதுமில்லை. உன் நிலையில் இருந்து பார்ப்பதற்குப் பதிலாக உன் பெற்றோர்கள் நிலையில் இருந்து பார். நீ விரும்பியதை எல்லாம் அவர்கள் தராமல் இருந்திருக்கலாம். ஆனால் தங்களிடம் இருந்ததை எல்லாம், தங்களால் தரமுடிந்ததையெல்லாம், தந்தார்கள் அல்லவா? தங்களுடைய வியர்வையின் பலன்கள் அனைத்தையும் உனக்குத்தானே நீராக பாய்ச்சினார்கள். பலன் தந்தாயா? ஈன்ற பொழுதினும் பெரிதுவக்கும் தாயாக உன் தாயை உயர்த்த நீ சான்றோனாய் வாழ்கிறாயா? 'இவன் தந்தை என்நோற்றான் கொல்' என இச்சமுதாயம் சொல்ல வைக்கிறாயா? என் மகன் பெரிய நிலைக்கு வருவான். என் மகள் நன்னிலை அடைவாள். எல்லா பிரச்சனைகளும் தீர்ந்துவிடும் என ஏங்கியிருக்கும் உன் பெற்றோருக்கு நீ தரும் பரிசென்ன? ஏற்றமா? ஏமாற்றமா? அவர்கள் கனவுகளைக் கலைத்து விடாதே. அவர்கள் நம்பிக்கையை நாசமாக்கிவிடாதே. இறந்த என் உடலை சுமந்தபோது என் அன்னையின் மனம் எவ்வளவு கனத்திருக்கும். 'மேன்மை மிக்கவராய் இருப்பார்' என வாக்களிக்கப்பட்டது. ஆனால் இறந்த என் மேனியைத்தான் அதுவும் சின்னாபின்னமாக்கப்பட்ட மேனியைத்தான் பார்க்க முடிந்தது. ஆனால் அந்தச் சிதைந்த உடலில் நான் நிகழ்த்திய யாகத்தின் வெற்றியைக் கண்டாள். உன் பெற்றோர் உன்னில் தங்கள் கனவுகள், இலட்சியங்கள் நிறைவேற காண்பார்களா அல்லது உன் சோம்பேறித்தனத்தால், ஊதாரித்தனத்தால் உழைக்க மனமில்லாமையால், முயற்சியின்மையால் விரையமாக்கிய வாழ்வைப் பார்த்து கலைந்த கனவுகளுடன் கனத்துபோவார்களா? அவர்கள் எதிர்பார்ப்பை ஏமாற்றம் ஆக்கிவிடாதே!

**செபம் :** இறைவா! ஈன்று வளர்த்த எங்கள் பெற்றோருக்கு இழிவை ஏற்படுத்தாமல் பெருமை சேர்க்கும் விதத்தில் வாழ்வை அமைக்க ஆற்றல் தாரும். ஆமென்.

# பதுங்குவது பாய்வதற்காக

*'' ஆண்டவரோடு எதையும் செய்ய ஆற்றலுண்டு ''(பிலி 4 : 13)*

**பதினான்காம் நிலை :**

**இயேசு :** 'எங்களை விடுங்கள். நாங்கள் பார்த்துக்கொள்கிறோம். சற்று ஓரமாய் நில்லுங்கள். நாங்கள் சாதிக்கிறோம்' என சவால்விடும் என் அன்பு மகனே! மகளே! உன் தன்னம்பிக்கையைப் பார்த்து பூரிப்படைகிறேன். உன் உத்வேகம் என்னை உறையவைக்கிறது. ஆனால் உன் முயற்சி தோல்வி அடைகிறபோது நீ எதிர்பார்ப்பது நடவாமல், நிகழ்வுகள் வேறு திசையில் போகும்போது மனம் உடைந்து போகிறாயே. உனக்குள் நீ புதைந்துபோகிறாயே அப்போது நான் வேதனைப்படுகிறேன். இது வேகமான இவ்வுலகம் ஏற்படுத்திய பாதிப்பு. இயந்திரமயமாக்கப் பட்ட இயல்பு நிலை உன் மீது ஏற்படுத்திய தாக்கம். சாதனைகள் சற்று தாமதிக்கத்தான் செய்யும். வெற்றிகள் சற்றுத் தொலைவில் தான் கிட்டும். இன்ஸ்டன்ட் உணவு கிடைக்கிறது என்பதால் இன்ஸ்டன்ட் வெற்றியும் கிடைக்குமா என்ன? வெற்றி பெறவேண்டும் என்ற உன் இலட்சிய வெறி பெருமைக்குரியது. அதை வேகமாய் பெறவேண்டும் என்று ஆசைப்படுவதிலும் தவறில்லை. அது உன் உற்சாகத்தை, சுறுசுறுப்பை, உத்வேகத்தை பொறுத்தது. ஆனால் அதிவிரைவாய், எடுத்த எடுப்பிலேயே கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறல்லவா! வெற்றியைக் குறைமாத குழந்தையாய் பெற்றெடுக்க விரும்பாதே. காலம் கனியட்டும். 'பொறுத்தார் பூமியாள்வார்' இதை புரிந்துகொள். மண்ணுக்குள் என்னை புதைத்தார்கள். எல்லாம் முடிந்துவிட்டது என நினைத்தார்கள். நானோ பொறுத்திருந்தேன். அவர்கள் முகத்திரையை கிழிக்க மூன்று நாட்கள் பொறுத்திருந்தேன். மூன்றாம் நாள் வெற்றி வீரனாய் விழித்தெழுந்தேன். நீயும் பொறுமையாய் இருக்கக் கற்றுக்கொள். புலி பதுங்குவது பாய்வதற்குத்தான். அது கோழைத்தனம் அல்ல. நீயும் வெற்றிக்கு சிறிது கால அவகாசம் கொடு. பத்துமாத பொறுமையின் பரிசாய் ஒரு குழந்தையைப் பெறும் தாய் போல நீயும் வெற்றியை நிறைமாதக் குழந்தையாய் பெற்று மகிழ்வாய்.

**செபம் :** இறைவா! எளிதாய் கிடைப்பது வெற்றியல்ல என்பதைப் புரிந்துகொண்டு விலகிச் சென்றாலும் விடாமுயற்சியுடன் வெற்றிக்காக போராடத் தேவையான பொறுமை தாரும். ஆமென்.

## சாதனம் பெற்றோம்.

## சாதனை புரிவோம்..

என் அன்பு மகனே! மகளே!

உன்னோடு நடக்கையில் என் சிலுவைப் பாதையே வேகமாக முடிந்தது போன்ற உணர்வு ஏற்படுகிறது. எத்தனை எழுச்சி! எத்தனை வேகம்! எத்தனை பலம்! உன் போன்றோர் சிலுவையைச் சுமக்கத் தொடங்கிவிட்டால் இவ்வுலகத்தை மீட்பது இன்னும் எளிதாகவும் விரைவாகவும் முடியும். ஆனால் சிலுவையைப் பார்த்ததும் முகம் சுளிக்கின்றாயே! உல்லாசமும் கேளிக்கையும் சிற்றின்பமும் கடைவிரித்து வியாபாரம் செய்யும் இக்காலத்தில் நான் முன்வைக்கும் சிலுவையை ஏற்றுக்கொள்ள எத்தனை பேர் வருவீர்கள்? வந்து பாருங்கள். அப்போது தெரியும். அது மரணத்தை நோக்கிய பயணம் அல்ல! அது சிகரத்தை நோக்கிய பயணம் என்று! சாதிக்கப் பிறந்தவனே! சாதிக்கப் பிறந்தவளே ! இதோ சாதனம் தருகிறேன்! ''என் சிலுவை'' ஏற்றுக் கொள். ஏற்றம் காண்.